# மன்னர் சரபோசி அரசு கல்லூரி, தஞ்சாவூர் – 613005

# தமிழ்த்துறை

## தொல்காப்பிய இலக்கிய மரபுநோக்கில் கீழ்க்கணக்கு நூல்களும் (அக – புறக் கோட்பாடுகள் ஒப்பீடு)

### தேசியக் கருத்தரங்கம்

சென்னை, செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்தின் நிதி நல்கையுடன் தஞ்சாவூர், மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி தமிழ்த்துறை சார்பில் தொல்காப்பிய இலக்கிய மரபுநோக்கில் கீழ்க்கணக்கு நூல்களும் (அக–புறக் கோட்பாடுகள் ஒப்பீடு) என்னும் பொருண்மையிலான தேசியக் கருத்தரங்கம் 20.01.2015 முதல் 22.01.2015 முடிய மூன்று நாட்கள் நடைபெற்றது.




20.01.2015 அன்று நடைபெற்ற தொடக்க விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் சோ. அன்பழகன் தலைமையேற்றார். இவ்விழாவில் தஞ்சாவூர், நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி முதல்வர் முனைவர் மு. இளமுருகன் கருத்தரங்க மையக்கருத்துரையாற்றினார். தொடர்ந்து கருத்தரங்கம் பத்து அமர்வுகளாக நடைபெற்றன. கேரளம், பாண்டிச்சேரி ஆகிய அண்டை மாநிலங்களிலிருந்தும் சென்னை, பாரதிதாசன் முதலான பல்வேறு பல்கலைக் கழகங்களிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் பேராசிரியர்கள், ஆய்வறிஞர்கள் பங்கேற்று ஆய்வுரைகள் வழங்கினர்.

22.01.2015 அன்று பிற்பகல் நடைபெற்ற நிறைவுவிழாவில் கல்லூரியின் விலங்கியல் துறைத்தலவர் முனைவர் சிவ. இராஜேந்திரன் தலைமையேற்றார். நிறைவு விழாவில் கேரளப் பல்கலைக் கழக மேனாள் தலைவரும் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆட்சிக்குழு உறுப்பினருமான முனைவர் இரா. காஞ்சனா, பங்கேற்று நிறைவு விழாப் பேருரை ஆற்றிச் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

மூன்றுநாளும் நடைபெற்ற தேசியக் கருத்தரங்கத்தில் முதுகலை மாணவர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பலர் கலந்துகொண்டனர். கருத்தரங்க ஏற்பாடுகளைக் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் த. இளஞ்செழியன், துறைத்தலைவர் முனைவர் து.ரோசி உள்ளிட்ட தமிழ்த் துறைப் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.